*Registered No. M. 408.*

உ

திருச்சிற்றம்பலம்.

# திருநாவுக்கரசு.

## திங்கட்கொருமுறைதோன்றித்திகழ்வது.

# THE THIRUNAVUKARASU.

## PUBLISHED ONCE IN A MONTH.

பத்திராதிபர்—தி. பா. சிவராமபிள்ளை.

புத்தகம் ௨] திருநெல்வேலி: விசுவாவசுஸு ஆனிமீ ௨௰௭-உ; 1905-ம்ஸு ஜூலைமீ 10-உ [இலக்கம் ௬.

"அகர முதல வெழுத்தெல்லா மாதி, பகவன் முதற்றே யுலகு."

உ

திருச்சிற்றம்பலம்.

"நெடிதரு தலையினர் வேனல்வெள் ளேற்றினர் விரிசடையர், பொடியணி மார்பினர் புலியத ளாடையர் பொங்கரவர், வடிவுடை மங்கையோர் பங்கினர் மாதரை மையல்செய்வார், செடிபடு பொழிலணி திருநெல் வேலியுறை செல்வர்தாமே."

"வாள்வரி யதள தாடை வரிகோ வணத்தர் மடவாட னோடு முடனாய், நாண்மலர் வன்னி கொன்றை நதிசூடி வந்தெ னுளமே புகுந்த வதனாற், கோளரி யுழுவையோடு கொலையானை கேழல் கொடுநாக மோடு கரடி, யாளரி நல்ல நல்ல வவை நல்ல நல்ல வடியா ரவர்க்கு மிகவே."

திருச்சிற்றம்பலம்.

---

உ

ஜூன்மாசத்துப்பத்திரிகையிலுள்ள சிறுத்தொண்டரைப்பற்றிய வினாக்களுக்கு

## விடை.

---

இவ்விடைகளை உணர்வதற்கு அன்பினிலக்கணம், பரோபகார இலக்கணம், நன்மை தீமைகளின் இலக்கணம், மோக்ஷ இலக்கணமாகிய நான்கும்நன்ருய் ஆராய்ந்தறிந்து கொள்ளல்வேண்டும். அவற்றை ஆராய்ந்தறிவதில் அபிப்பிராயபேதம் உண்டாகில் இவ்விடைகள் சர்வசம்மதமாகமாட்டா. ஒரே சூத்திரத்திற்கு பல்வேறு பாஷியங்கள் ஏற்பட்டிருப்பது போல இவ்விஷயத்தையும் அவரவர் அறிவிற்கும் பக்குவத்திற்கும் தக்கவாறு கிரஹித்துக் கொள்ளவேண்டுவதேயாம். ஆதலால் ஐயமற இவ்வினாக்களுக்கு விடையளிக்கக் கூடுமோ என்பது சந்தேகம். எனினும் ஒருவாறு விடை பகர்வாம்.

(1) உலகத்தில் இருவர் நட்பினராயிருப்பின் ஒருவருக்குற்ற இன்பதுன்பங்களை மற்றவர் தமக்கு வந்தனவாக பாவித்தல் அன்பு.

(2) யாவர் எதை விரும்பினும் அது அவருக்கு நன்மையை உண்டாக்குமேல் தன் உயிரை மாறியும் அவ்விருப்பத்தை நிறைவேற்றல் பரோபகாரம்.

(3) ஓர் வினையானது நன்னோக்கத்தையும் நற்பயனையும் உடையதாகில் நன்மையும், தீய நோக்கத்தையும் தீயபயனையும் உடையதாகில் தீமையுமாக வாகும்.

(4) ஆண்டவனாகிய பரம்பொருளிடத்தில் அழுந்திய விசுவாசம்வைத்து, அவ்விசுவாசத்தால் விளங்கிய அறிவைக்கொண்டு யான் எனது எனும் அபிமானம் விட்டுப் பாதந்திரனாக ஒழுகுதலே தன்கடமையென்று கருதி அக்கடமையைத் திரிகரண சுத்தியோடு நிறைவேற்றியடையும் ஆனந்த நிலையே மோக்ஷம். இக்கொள்கைகளோடு ஒருவர் சிறுத்தொண்டர் சரித்திரத்தை வாசிக்கில் கடவுளாகிய அடியார் பிள்ளைக்கறி கேட்டது தான் உண்பது கருதாமையையும், சிறுத்தொண்டர் பிள்ளையை அறுத்தது தீங்குகுறியாமையையும் விளக்குவதால், சிறுத்தொண்டர் செய்கை தோஷமாகத் தோற்றமாட்டாது. சாதாரணமாகிய ஓர் போர்ச்சேவகன் சொற்பப் பொருட்பயனைக்கருதித் தன் எஜமானுக்காகத் தன் உயிரைப் பலிகொடுப்பனேல் அறிவிற்சிறந்த அன்பர் எவர்தான் சிறுத்தொண்டரைப் பின்பற்ருர்? உண்மையான அன்பர்க்கு அவரைப் பின்பற்றல் அருமையாகத் தோற்றமாட்டாது. (பின்னர் விரிப்பாம்)

இலக்குமணப்போற்றி.

---

## ஒரு சந்தேகம்:—

---

ஸ்ரீ சிவபெருமான் சுந்தரமூர்த்தி நாயனாரைத் தடுத்தாட்கொண்டருளிய சரித்திரத்தைக், குறித்த நாயனார் பரவையார், சங்கிலியார் என்னு மிருவர்மாதரைக் காதலித்த சரித்திரமும், அவர் பொருட்டுச் சிவபெருமான் தூதுசென்ற சரித்திரமும் வாதிக்கமாட்டாவோ?

உண்மை உசாவுவோன்.

---

கையொப்பவிகிதம்:— உள்ளூர், வெளியூராருக்குத் தபாற்கூலி யுட்பட முன்பணமாக ஒரு வருஷத்திற்கு ரூ 1. மோர்மேன் சிங்கப்பூருக்கு ரூ 2. தனிப்பிரதி 1-க்கு அணா 2.

உ

சிவமயம்.

# திருநாவுக்கரசு.

திருச்சிற்றம்பலம்.

"பித்தரசு பதையாத கொத்தைநிலை யுளதேவ-பெட்
டியுனா செய்துசோறு சுட்டியுழல் சமண்வாயர், கைத்
தரசு பதையாத சித்தமொடு சிவபூசை–கற்றமதி யினனோ
சை யித்தரசு புகழ்ஞால, முத்திபெறு திருவாளனெற்
றுணையின் மிதவாமல் கற்றுணையில் வருமாதி, பத்தரசு
வசைதீர வைத்ததன தமிழ்மாலை – பற்பலவு மவையோத
நற்பதிக நிதிதானே."

திருச்சிற்றப்பலம்.

---

உ

## அன்பும், அறிவும்.

---

வித்திலே முளையிருக்கின்றது; முளையிலும் வித்திருக்கின்றது. முளையிலே முளைக்கக்கூடிய சத்தியும் இருக்கின்றது. நிலம் நீர் முதலியவை வித்தினையும் முளையினையும் பக்குவப்படுத்தி அம்முளையை வெளிப்படுத்துகின்றன. அது வெளிப்படும்பொழுது நிலம் முதலிய சில அதற்குத்தடையாகவும் இருக்கின்றன. ஆயினும் அது அவற்றுடன் போராடி அவற்றைத் தள்ளிக்கொண்டு வெளியே வந்துவிடுகின்றது. அப்போராட்டமும் அதற்குதவியே செய்தது. எப்படி? அதை அந்நிலக்கிசையச் சிறிது பலமுடையதாக்கிற்று. பின் அந்நிலமுதலியன அதற்குப் பலவகையாலும் உதவியே செய்கின்றன. ஆதலால் அது அரை, கிளை, இலை, தளிர், அரும்பு, முகை, மலர், காய், கனி எனப்பல உறுப்புகளாக விரிந்து யாதொரு தடையுமின்றி மேலே ஆகாயத்திலும், கீழே, ஆணிவேர் அல்லது மூலவேர், கிளைவேர், சிறுவேர் முதலிய பல உறுப்புகளாக விரிந்து, பாறை முதலியவற்றையும் உடைத்து யாதொரு தடையுமின்றிப் பூமிக்குள்ளும் பரந்து பலமுடையதும், பலனுடையதுமாகின்றது. கனியுள் வித்திருத்தலின் அது தன்னைப்போலவே பலவற்றை உண்டாக்கிவிடுகின்றது. ஆயினும் அதுவும் அதுபோன்றனவும் ஆகாயமுழுவதும் மண்முழுவதும் நிரம்புவதில்லை. இதுபோலவே, உயிருள்ளும் "வித்"தென்னும் அறிவிருக்கின்றது. அவ்வறிவிற்கும் ஒருவகையான உயிர்த்தன்மையிருக்கின்றது. ஆதலால் அது தானாகவே வளரும் சத்தியுடையதாயிருக்கின்றது. அதற்கு அதனைச்சூழ்ந்துள்ள மற்றப்பொருள்களெல்லாம் உதவிசெய்து அதனை வளர்க்கின்றன; அம்மட்டோ அதற்குத் தடையுஞ்செய்கின்றன. ஆயினும் அத்தடையையும் தன் முயற்சியினாலேயே தள்ளி மேல்வருகின்றது. அதனால் அத்தடையும் அதற்குதவியே செய்கின்றது. எப்படி? அதை அந்நிலக்கிசையச் சிறிது பலமுடையதாக்கிற்றன்றோ? பின் அத்தடை அதற்குப் பலபடியாலும் உதவியேசெய்கின்றது. ஆதலால் அது மேலோங்கிப் புறத்தே சிறியவும் பெரியவுமாகிய பலநூல்களையும், பலவசனங்களையும் விரித்து, அதனாற் பலவகைப்பட்ட உண்மைகளையும் பரவச்செய்கின்றது; அகத்தே அறியாமையாலும் பலநாட்பழக்கத்தாலும் அமைந்துகிடக்குந் தடிப்புகளை உடைத்துக்கொண்டு, உண்ணோக்கி ஆழ்ந்து, நுணுகி, விரிந்து, தனது லக்ஷியமும், அதனைச்சார்ந்த பல ஆராய்ச்சிகளும் அநுபவங்களுமாக விரிந்து மிகப்பலமுடையதும், பலனுடையதுமாகின்றது. உண்மையுள்ளே அறிவிருத்தலின், அது அவ்வுண்மைகேட்ட உயிர்கட்கெல்லாம், அறிவையே தந்து தன்னொத்த பல அறிவை உண்டாக்கிவிடுகின்றது ஆயினும் அது தானும் தன்னொத்தனவும் தம்மிற் குறைதீர்ந்தபாடில்லை. இன்னும், இவ்வறிவு நிலனாக இதன்கண்ணின்று இதனையும் வளர்த்துத் தானும் முற்கூறியவாறே, இதற்ககமும் புறமுமாய் வளர்ந்தோங்கி, இதனைத் தன்முகமாக்கித் தன்மயமாக்கித் தானும் இதன் மூகமாக, இதற்கு எம்முகமுமாக வெளிப்பட்டளவுகடந்து இதனையும் எவற்றையும் விழுங்கி நிற்பதோர் பேரறிவுண்டு; அது மற்றெல்லாவித்தையும் கடந்ததொன்றாகலின் அதனைக்கடவுள்வித்தென்னலாம்! அக்கடவுள்வித்தும் தன்னை நோக்கி இவ்வுயிர்ப்பொருளதறிவின்சிறுமையாற் றன்னை இவ்வுயிர்ப்பொருட்குத்தரும் ஆற்றலும், அறிவும், காதலும் தனக்குளவாயினும் அவ்வாறுதரத் தடைப்பட்டும் நிற்கின்றது. ஆதலின் இவ்வுயிர்ப்பொருள் தன்முகமாகிச்சிறிதாயினும் நெகிழ்ந்துகாட்டுமாயின் அதுவேநல்ல சமயமாக்கி இதனைத் தன்முகமாக்கி ஈர்த்துக்கொண்டு இதனறிவாற்றல்களைப் புடைபெயர்த்தினிதியக்கி இதனை மிகவும் பரபரப்புடையதாக்குகின்றது; அந்நிலையிற்றான் இவ்வுயிர், அல்லது இவ்வுயிரின் அறிவாற்றல்கள் தாமும் அக்கடவுள்வித்தோடு கூடிநின்றே அக்கடவுட் குறிப்பிற்கிசைந்து அதன்வசப்பட்டுத், தமக்கிதுகாறும் உண்மையுணர்ச்சி நிகழவொட்டாது தடுத்துநின்றதடைகளையெல்லாம் அவ்வாறு இனிச் செய்யவொட்டாது தன்மைவிடுக்கமுயலும்; அவையே தடைவிடைகளாகிய வடிவங்களை எடுக்கும். அந்நிகழ்ச்சியெல்லாம் கடவுட்குறிப்பின்றி நிகழமாட்டாவாம். ஆதலின் அந்நிகழ்ச்சியனைத்தும் பின்வரக்கடவதாயுள்ள மிகப்பெரியதோர் நன்மையையே நோக்கிநிற்கும். ஆதலாற் றடைவிடைகள் என்பன எக்காலும் உயிரின் வளர்ச்சிக்கேயன்றி, தளர்ச்சிக்குரியன வல்ல. கடவுட்பொருள் இதனை மௌனமாய்நின்று தெரிவிக்கின்றது. அன்பினால் அறிவும், அறிவினால் ஆற்றலும், ஆற்றலால் மீட்டும் அறிவும், அறிவினால் அன்பும், அன்பினால் திருவருளும், அதனாற்றெளிவும், அதனாற் பேரின்பமும் நிகழும். ஆரம்பம்அல்லது மத்தியகாலங்களில் வினையவற்றை இல்லையென்றெண்ணலாகாது; அவசரப்படவுங்கூடாது. இதனை 'மேதக்ககேள்வியே கேள்வியாம் பூமிக்குள்வித்தே,யவ்வித்தின் முளையே, கண்ணே,கருத்தே,யெனெண்ணே யெழுத்தே, கதிக்கானமோனவடிவே" எனவும்,"முளையின் வித்துமவ் வித்தின் முளையும்போற்,றனையில்பத்தி சிவப்பிரசாதத்தோ,டனவி யொன்றினொன்றுருமப்பத்திதான், வளமுறும் பிறப்பொன்றில் வருவதோ"

ளவும் வரும் ஆன்றோர் வாக்குக்கள் பலவற்றானும், பலவாற்றானும் தெரிந்துகொள்ளலாம். இங்ஙனமாகவும், யாராவதுசிலர் அல்லது பலர்நமது ஞானக்குழவியாகிய "திருநாவுக்கர"சிலேதமது ஆரம்பம் அல்லது மத்தியகதியிலே அல்லது எந்நிலையிலேனும் நின்று சமயசம்பந்தமாக யாதானுமொன்று வினவுமிடத்து அது தமது கொள்கைக்கு மாறாகத்தான் அல்லது மறுப்பாகத்தா னிருக்கக்கண்டால் அன்பர்கள்சிலர் அல்லது பலர் அதனைக் காணவும் கேட்கவும் அஞ்சுகின்றார்கள். அவ்வாறஞ்சுதலால் அவர்கள் நம்மைநேரிற்கண்டும்சொல்லியனுப்பியும் அத்தகைய விஷயங்களைநமது திருநாவுக்கரசிலே பிரசுரித்திடலாகாதென்கின்றார்கள். இஃதென்னை! அத்தகைய வினாக்கட் கிவர்களேனஞ்சவேண்டும்? அவைஒன்றுமறியாதாரை அல்லது குருட்டறிவினரை மயக்கிவிடுமென் றஞ்சுகின்றார்களா? அப்படியாயி னக்குருட்டறிவினர் அம்மயக்கநிலையைத் தொடாமலே தாண்டிவிடுவார்க ளென்று நம்புகின்றார்களா? தெளிந்தது கலங்குமா? கலங்கக்கூடியது இப்பொழுதுகலங்காததுபோற் றோற்றினும் பின்னெப்பொழுதாவதுகலங்கத்தானே செய்யும். அப்பொழுதும் இவர்கள்போய்த்தடுப்பார்களா? தடுக்கமுடியுமா? கலங்கினது பின்னொருபொழுதும்தெளிதல்இல்லையா? கலங்கற்சின்னீர் தெளியாதென்பரோல்கலங்கியதைக்கலக்குதலாகிய வரலாற்றின் கருத்தென்னை? இன்னும், அச்சின்னீர் எப்பொழுது பெருநீராகும்? பெருநீராகுதற் குபாயம் என்ன? பெருநீராகுமென்று நம்ப இடமுண்டா, இல்லையா? இல்லையாயின், அதற்கும் இத்திருநாவுக்கரசுக்கும் என்ன சம்பந்தம்? அன்றியும் ஒரு வித்து முளைக்கவேண்டுமென்னும் விருப்பமுடையோர்க்கு அது முளைக்கும்போதே அம்முளையைக் கிள்ளிவிட மனம் வருமா? அது மென்மேலுந் தழைத்தோங்கும்போது அதன் பயனுணர்ந்தோர் அதை அறுத்தெறியலாமா? அறிவென்பது நச்சுமாமரமா? அது தன்னியல்பிலே நஞ்சுடையதாயின் அதனைக் கடவுள் நம்முடன் கூடவே யிருக்கும்படி அருள் செய்வாரா? மரத்தையாவது வளரும்போது தடுக்கலாம்; அறிவு வளர்ச்சியை எவ்வாறு தடுப்பது? தடுத்தாலும் நிற்குமா? எங்கேயாவது எப்பொழுதாவது கிளம்பிவிடாதா? இவ்வினாக்களை இங்கே கேட்கவேண்டாமென்று நாம் தடுக்கலாம்; அவை வேறெங்கேயாவது இப்போதே கிளம்பிவிடமாட்டாவோ? அன்றியும் இவ்வினாக்களுக்கு விடையில்லையா? எப்பொழுதும் இல்லாமலே போய்விடுமோ? எப்பொழுதாவது வருமாயின் அது நமக்கும் பிறர்க்கும் இலாபகரமல்லவா? எப்பொழுதும் இல்லாதொழியுமாயினும், அவ்வினாக்கள் நமக்குக் கெடுதிவிளைப்ப தெப்படி? கேட்டசேவிக்கு எப்பொழுதாவது, எப்படியாவது பதிற்சொல்லாத விஷயங்கள் நமக்கிருந்தாவதென்னை? அன்றியும் உண்மை எப்பொழுதும் உண்மையாகத்தானே விளங்கும்? உண்மையென்னுந் தங்கம் கேள்வியென்னும் புடமிடுந்தோறும் மாற்றுயருமா? தாழுமா? இவ்வுண்மையுணர்ந்தோர் அசத்தங்கரதைப் புடமிடவஞ்சுவார்களா? ஆகவின் அத்தகைய வினாக்கட்கு அவ்வன்பர்கள் அஞ்சாதிருத்தல்கடன். அன்பும் அறிவும் கலந்தின் புறுக.

உ

## மெய்கண்டசிவமயம்.

"சிவாலய வழிபாடு வேண்டற்பாலதன்றென்பது சாதிப்பது போன்றெழுந்த "விக்கிரகாராதனம்"; என்பதனை மறுக்குமுகத்தான் அதுவே பொருதலையான் வேண்டற்பாற்றென அதனை வலியுறுத்துவது

"விக்ரகாராதனம் விளங்குக வுலகினின்
எக்கர்கண்மனமுமீ தெய்துக விளிதே"

"இலவிக்ரகமென லாங்கிலத்தி னென்பதுஞ்
சொலுமுண்மை சைவநூல் சுருதி யென்பதுஞ்
சிலவபி மானர்தே றிலர்க ளாயினும்
பலர்புகழ் பக்குவர்க்குணர்த்தும் பான்மையான்"

கோடன் முறையாற்கொண்டு விக்கிரகாராதனங்கூறுஞ் சைவநூற்பொருளுண்மை யுணர்தற்குரிய தவமுதிர்ச்சியின்மையின், இலக்கணவரம்பிலா மொழியாய வனைப்பாடை நூல்களையே பாராட்டி நற்பாடை நன்னூல்களையும் அவற்றோடொப்பவைத்து பொதுமையிற் பாராட்டும் வெள்ளறிவுடையவொருசாரார், குழறுபாட்டுமுறையாற் சில குழறுபடைநூல்களைக் கற்றுக்கொண்டு, அவ்வாற்றாற்றும் முற்றக் கற்றார்போ லபிநயித்துக்காட்டி, நான்யார், பந்தமேது, மோக்ஷமேது, சாதனம் யாதென்று ஆராயலுறுவார் போலெழுந்து, நூலுட்கூறு மிலக்கணமமைந்துடைய நுவல்வோன், (இலக்கணமமைந்துடைய நூலை, நுவலுமுறையா னுவல, அது கொள்வோன் கோடன் மரபாற் கொள்ளின், ஆசங்கையாது நிகழாது) அம்முறையாதுமின்றித் தமக்குத்தோன்றியமுறையேமுறை, அம்முறையானிகழு மாசங்கையே யாசங்கை, அவ்வாற்றாற்றுணிவதே துணிபென, முடிக்குத்தக்க தலைசெய்து கோடுமென்பாரோடு கூடிப்பயின்ற பயிற்சிபற்றிச் சாதிப்பாராய் விக்கிரகாராதனம் வேண்டற்பாற் றன்றென்பதற்குச் சில போலியேதுக்களெடுத்தோதித் தம்முள்வைத்துத் தாமே நலம்பாராட்டா நிற்பர். அது கேட்ட பேதைகளும் விக்கிரகாராதனம் வேண்டாவென அவர்கூறு மேதுக்களையும் அது வழிபாட்டிற் கின்றியமையாது வேண்டப்படுவதென அசனுண்மைகூறுஞ் சிவாகம வாக்கியங்களையும் முன்பின் மலைவறநோக்கி இஃதியையும் மற்றிஃதியையாது, எனவறியு மாற்றலின்றிக் கெதானுகெதிக நியாயத்தானே, அவர் மதத்துட்டானே வீழ்ந்து கூடி, நலம்பாராட்டா நிற்பர். அவைமெல்லாஞ் சிறிதுமியையாதென்பது தலையாயவறிவினர் யார்க்கு மினிதுவிளங்கும். அஃதறியாது மதம், மானம், மயக்கம், அறிவின்மை, பொருளவா, முதலியனபற்றிப் பிணங்கும் புல்லறிவாளர் ஒருவாற்றானும் தெருட்டற்குரியரல்லர். ஆகவின், அவ்விருதிறத்தாரையு மொழித்தொழிக் கிடைநின்றாராய சித்தாந்தோபதேச மாத்திரையே கேட்டுச் சிந்தித்து வைகு மந்தமதியுடையார்க்கு அதன்கட் புத்திப்பிரம்சம் வாராது சிறி தொருவழிகாட்டுகவெனச் சிட்டர் சிலர் கேட்டலின், இது எழுதுவான் புகுந்தோமென்பது.

சிறுமியர் சிறுசோறட்டுண்டு தேக்கித் தம்முட்களிக்குமாறொப்ப, ஆசங்கிக்குந் தகுதியில்லவற்றையெடுத் தாசங்கித்த, அங்ஙனங் குற்றம்போலச் சிலகூறி "கல்லா

வொருவன் றகைமை தலைப்பெய்து சொல்லாடச் சோர்வுபடுமே" என்பதுபற்றி யதனைக் கற்றுமுதிர்ந்தோர்பால் சேரோகூறித் தருக்கித்தற் கஞ்சித் தமது பத்திரிகையுண் மாத்திரையே வைத்தெழுதிக்கொண்டு நயங்கோடலாற் போந்தபயன் றமக்கெனவறிவொன்றிலராய பேதைகளைத் தம்மாட் டீர்த்துக்கோடன் மாத்திரையேயன்றிப் பிறிதின்மையின், அவையெல்லாம் ஆகாயத்தினெழுதிய சித்திரம்போல, வெறும் போலியேயாமென்பதூஉம், விக்கிரகவுண்மை, கோடன்முறையாற் கொண்டுணரு மாற்றலின்மையின், அவ்வாறெல்லாம் குழறினரென்பதூஉம் நுண்ணுணர்வுடையர் யார்க்கும் இனிது விளங்கும். அஃது அவ்வாறாதல் சிறிது காட்டுதும்.

"அருமெய்மறை நெறிதழைப்ப வாசமகற் றறைவிளங்கப், புருடபரம் பரைபொலியப்பே தம்வாய் மலர்ந்தருளும், பெருகுபுனற் பெண்ணைவயல் வெண்ணெய் நல்லூர் மெய்கண்டோய், கருகுமனத் தபிமானர் கலைமறுக்கு மாமறுப்பாய்"

இந்துமதாபிமானிகளின் பத்திரிகையும் விக்கிரகாராதனமும் தம்முள் வேறோ, ஒன்றோ? ஒன்றாயின் இருவேறுபெயர் யாதற்கு? வேறாயின் தம்முள் வேற்றுமை யென்னை? இனி இந்துமத வாக்கியார்த்தமென்னை? இந்துமதமாவது யாது? அவ்வழக்குக்கு ஆதாரமென்னை? அற்றேல் அவ்வழக்கு நுமக்கு உடம்பாடோ அன்றோவெனின் அதுய முறைதவாறுபற்றியுய்த்துணர்ந்துகொள்க. இனி விக்கிரகசப்தார்த்தமென்னை? ஆராதனமாவது யாது?

இனி சில இந்துமதாபிமானிகளின் பத்திரிகையெனப் படர்க்கை வாய்பாட்டான் வைத்தோதினீ ; ஆகவே நீவிர் இந்துமதாபிமானிகளல்லீரென்பதற்கு நீவிரங்ஙனங்கூறியகூற்றே சான்றாயிற்று. "நானுமறியேனவளும் பொய்சொல்லாள்" என்னும் பழமொழியின் பொருளை நுமபாற் கண்டோம், அல்லதூஉம் அங்ஙனங்கோடுமேனும் அதுகொண்டுதானே நுங்கருத்து நிரம்பாது, இந்துமதாபிமானிகட்கும் இந்துமதமுடையார்க்குந் தம்முள் வேற்றுமை பெரிதாமாகலின் அபிமானம் பொருட்பேறு முதலியனவாய் ஒரோவோரேதுபற்றி அவாந்தரத்து நிகழ்வதென்பதூஉம், உடைமை அவ்வேது முதலிய யாதுமின்றி யியற்கைத் தென்பதூஉம் எல்லார்க்கும் ஒப்பமுடிந்தமையானென்பது.

இனி விக்கிரகத்தை யாராதிக்குமாற்றைக் கண்டிப்பார்போற் புகுந்தநீர் அதற்கேற்குமாறு விக்கிரகாராதன கண்டனமென வைத்துரைக்க வறியாது அதற்குமாறுபாடாக விக்கிரகாராதனமெனவும் பின் அதன் மறுப்பாயெழுந்த வெதிரேகத்தை மறுப்பார்போன் றெழுந்தநீர் அதற்கியையுமாறு வெதிரேக மறுப்பென்றுரைக்க வறியாது வெதிரேகமெனவும் நீர் வைத்துரைத்தது நுமக்கவசித்தாந்தம். அற்றன்று. பிறர்செய்யு மாராதனைப்பற்றி அதனையாராயப்புகுந்தனமாகலின் அங்ஙனம் அப்பெயரான்வைத்து வழங்கினமாலெனின் அறியாது கூறினீர் அற்றாயின் ஆராய்தன் மாத்திரையேயமையும். அதன்மேல் கண்டன மிகையாகலானென்பது. அற்றன்று அங்ஙனம்ஆராயுமுகத்தானவ்வாறுபதாமாகலின் அதுபற்றி இழுக்கென்னையெனின், அறியாது வினவினீர் அது ஆராய்ச்சி முறை யறியாதார் கூற்றேயாமாகலின்.

இனிக் குறிப்புப்பொருள் இலக்கணைப் பொருளென்னினும் பொருந்துவனவல்ல, அவை பத்தியத்திற்கன்றிக் கத்தியத்திற் சேலாமையானென்பது. அல்லதூஉம், அங்ஙனங் கோடுமேனும் தொடக்கத்துள் நீர்சொன்ன சொற்கு அங்ஙனம் பொருள்கோடுமாயின் இவ்வாறே நுமது வாக்கியங்கண் முழுதும் சொற்கிடக்கை முறையானன்றி இலக்கணை முதலியனபற்றி விக்கிரகாராதனமே செயற்பாற்றென வேறுபொருள் கோடற்பாலதாமென முடிந்தது. இனி நுமது வாக்கியங்கட்கெல்லாம் இம்முறையாற் பொருள்கொள்வுழி நுமது கண்டனமதங் கைவிடப்படுதலும் நமது விக்கிரகாராதனமதமே நிலைபேறுடைமையும் ஒருதலையாமாகலின் ஏதேதோ தெரிந்தவர்போல் விக்கிரகாராதனத்தைக் கண்டிப்பார்போன்று முகரோமமுறுக்கி முழங்கியெழுந்தநீர் முதற்கட்டானே விக்கிரகாராதன கண்டனமென்றுரைக்க வறியாது விக்கிரகாராதனமெனவும் அக்கண்டன கண்டனமாயெழுந்த வெதிரேகத்தை மறுப்பார்போன்றெழுந்தநீர் வெதிரேகமறுப்பென்றுரைக்க வறியாது வெதிரேகமெனவுந் தலைப்பெய்துரைத்த சொற்கட்கு இலக்கணைமுதலியனபற்றிப் பொருள்கோடல் நமக்கே பலமாயிற்று. இதனானே "நானுமறியேனவளும் பொய்சொல்லாளெ"ன்னுந் தொல்வாக்குக்கு நும்வாக்குச்சிறந்த எடுத்துக்காட்டாயிற்று.

இனி வெதிரேகமுடையார் விக்கிரகாராதன கண்டன வெதிரேகம் என்றுரைத்ததனை அறிந்து வைத்தும் அதனை மறுப்பார்போன்றெழுந்த நீர் அவ்வெதிரேகமுடையாரை நோக்கி விக்கிரகாராதன வெதிரேகமென வைத்துரைக்காது விக்கிரகாராதன கண்டனவெதிரேகமென வைத்துரைத்தது என்னையென்றாசங்கியாது நீரும் ஓர் போலி மறுப்பெழுதினீர். ஈதென்சொல்லியவாறோவெனின் எண்ணியாங்கே விக்கிரகாராதன கண்டனமென வைத்துரைக்கவேண்டியதனையே மயங்கி விக்கிரகாராதனமென வைத்துரைத்துக்கொண்டவாறே அதனுட் போந்த பொருள்களும் வெறும் பொய்யேயாமென யாம் கூறியதனையே நீரும் உடம்பட்டீரென்றவாறாயிற்று. ஆகவே நமக்குடம்பாடிலதாய விக்கிரகாராதனம் வேண்டற்பாற்றன்றென்பது நுமக்கும் உடம்பாடன்மை பெற்றாம். இனி விக்கிரகாராதன வெதிரேகமென்னாது விக்கிரகாராதன கண்டன வெதிரேகமென் றுரைத்தவாற்றான் வெதிரேகமுடையார் கருத்தும் இதுவேயாமென்பது இனிது விளங்குதலின் வெதிரேகமுடையார், நீவிர், யாம் என்னு மூவர் கருத்தும் தம்மு ளொப்பனவேயாமாகலின் இனி, அதுபற்றி யாசங்கையென்னையென்றொழிக. இதனை இன்னும் ஈண்டுரைத்தவாறு பற்றி விரித்துரைத்துக்கொள்க பிறவுமன்ன. இக் கூறிப்போந்தவாற்றான் ஒளியுமிருளும்போற் றம்முண்மாறுபட்டனவாய எதிர்மறையியல்பு, உடம்பாட்டியல்புகள் அறியாதவாறே நும்பொருட்பெற்றிகழுமாமென்பது கைமுதிய நியாயத்தானினிது விளங்கும். அற்றாகவினன்றே இவற்றை இங்ஙனங் காட்டி இத்துணையினெழிந்தாமென்பது.

இனித் தெய்வமுளதென ஒப்புக்கொண்டோமென்

நீர். அற்றேல் அவ்வனவினவன் மகிழுசவென்னு நியா
யம்பற்றிச் கூறுதும். 1 தெய்வமென்னும்பதார்த்தமெ
ன்னை? 2. அதுதான் ஆதியோ அனாதியோ? 3. அஃது
ளதாதலை ஒப்புக்கொண்ட தெவ்வாறு? 4. அஃதிலதெ
ன்றுற் படுமிழுக்கென்னை? 5. தெய்வமாவது யாது?
6. அசற்கிலக்கணம் உளவோ இலவோ? உளவாயின்
7. அவை யாவை? 8. ஒன்றோ பலவோ? அவை எவற்
றானறிபற்பல? 9 அவ்வியாத்திமுதலிய குற்றமுள
வோ, யிலவோ? 10. உளவாயின் அவையாவை? 11. இ
னி உளதென்றது யாது? 12. ஒப்புக்கோடல் என்பதெ
ன்னை? 14. ஒப்புக்கொண்டது ஒன்றோ பலவோ?
15 அகத்தா புறத்தா? 16 இரண்டானுமா ஒன்றானா?
17. அதற்குக் கருவி வேண்டுமோ வேண்டாவோ?
18. ஒன்றோ பலவோ? 19. அவை யாவை? 20. வேண்
டாவேல் வேண்டாதொப்புக்கொள்ளுமா றியாங்ஙனம்?
21. நீவிர்தாமேபாய் ஒப்புக்கொண்டீரா?. பிறர் தம்மானா?
22. ஒப்புக்கோடலாற்போந்த பயனென்னை? 23. ஒப்புக்
கொள்ளாமையான் வரு மேதமென்னை? 24. பயனுக்
கும் பயனுளதா இலதா? 25 உளதாயினியாது? 26. ஒப்
புக்கோடன் மாத்திரையே யமையுமோ, அதன்மேலறித
லும் வேண்டுமோ வேண்டாவோ? 27. வேண்டுமேலறி
தலென்பதியாது? 28. சாதனம் வேண்டுமோ வேண்டா
வோ? 29. ஒன்றோ, பலவோ? 30. வேண்டுமேலவை
யாவை? 31. ஒப்புக்கோடற்குச்சான்றுளவோ இலவோ?
32 உளவாயினவையாவை? இவற்றை இன்னும் ஈண்
டுரைத்தவாறு பற்றி விரித்துரைத்துக்கொள்க. யாமுரை
ப்பிற் பெருகும். மேலும் இவ்வாறோர்ந்துணர்க. ஈண்டுப்
படுங்கடாவிடையெல்லாம் "எம்மிறைவர் திருமேனிஎன்
றதற்கும் ஒக்கும். பிறவுமன்ன. இஃதினம்பற்றிச் சொற்
பல்காமைப்பொருட்டு ஈண்டுவைத்துரைக்கப்பட்டது.

இவ்வாறு தேர்ந்துணர்வார்க்கு விக்கிரகாராதனத்
தைக் கண்டிப்பதுபோன்றெழுந்த கண்டனமாய மறுத
லைப் பொருளோடு பெரிதும் மாறுபடுதலின் சிறிதும் பய
ன்படாது வெறும் பொய்யென்பது தெளியக்கிடந்த இப்
பெயர்முதலியனபோல அதனுட் போந்தனவாய பொரு
ளியல்பெல்லாம் பெரிதும் மாறுபடுதலிற் சிறிதும் பயன்
படாது வெறும் பொய்யேயாதல் ஒருதலையாமென்பது
ஸ்தாலிபுலாக நியாயம் பற்றி யறிந்துகொள்ளுக.

இனி "கூடுமாயின் விக்கிரகாராதனமின்றிக் கடவு
ளை வழிபடுதற் கொருவழி மேற்கூறிய தோஷாரோபண
ங்களின்றிச் சொல்லட்டும் பார்ப்போம்" என விஜயகே
சரியுடையார் வினவுதறிந்து வைத்தும் அதற்கு வழிசொ
ல்லாததற் கேதுவென்னை? அற்றன்று அது அவாந்தரத்
தெழுந்ததாமாகலின் அதன்முன் எழுதுமா றெடுத்துக்
கொண்ட வெதிரேக மறுப்பை யிறுவாய் செய்தபின் எழு
துதுமாலெனின் அற்றேல் நீவிர் இஃதெழுதுதற்கு முன்
னெழுந்ததாய "கடவுளை வணங்குதற்கு ஆலயமும் விக்
கிரகமும் அனுகூலமோ, பிரதிகூலமோவென் றறிதற்
குபாயமுடையார் வினவ வினாக்கட்கு இறையிருத்தற்
கேதுவென்னை? தெரியாது விட்டீரோ? ஆமெனின் வெ
திரேகத்தை மறுத்தற்குத் தெரிந்ததெவ்வாறு? இனி அ
றுத்துவிட்டனம், மறந்துவிட்டனமென்றித் தொடக்கத்

தேதுப் போலிகள் கூறுதலும் அடாவாம். ஏது இலக்க
ணமறியாதா ரியல்பாய் முடியுமாகலின்.

இங்ஙனமாக விக்கிரகாராதனமே ஒருதலையான் வே
ண்டற்பாற்றென்பதனைக் குறிப்பானே சாதித்த வேதுக்
களை எதுக்களாற் சாதித்த வழிப்பெறப்பட்ட மறுப்பாய
கல்லெறிக்கஞ்சி நமது விக்கிரகாராதனமதங் கைவிட்
டோடும்பொழுது நீர் அதனைச் சாதிப்பானெடுத்துக்கொ
ண்ட எதுமுதலிய யாவும் அதன்முன்னரேயோடி யொ
துங்குநீரனவேயன்றிச் சிறவனாயேனு நின்றூற்ற மாட்
டாவென்பதறிந் தடங்கிக்கொள்ளுக.

இனி யாம் மேல்வினவிப்போந்த வினாக்களெல்லாம்
நீர் ஒப்புக்கொண்ட பொருள் பற்றியே எழுந்தனவாமாக
லின் இவைகட்கும் விஜயகேசரியுடையார் உபாயமுடை
யார் வினாக்கட்கு இறையிறுதொழிந்தாங் கொழிவீராயின்,
நீர் ஒப்புக்கொண்ட தெய்வவுண்மை சொன்மாத்திரையே
யன்றிப் பயன்படாமையின் நீவிர் ஒப்புக்கொண்ட பொ
ருளியல்பே இதுவென்றுரைக்க வறியாதீர்க்கு நீவிர் ஒப்
புக்கொள்ளாத பொருள்பற்றி யெழுந்த ஆசங்கைகட்கெ
ல்லாம் இறையிறுப்பின் விளங்கும் பக்குவமுடைய ரல்
லீரென்பது கைமுதிய நியாயத்தா னினிதுவிளங்கும்.
பிறவுமன்ன.

இனி "தம்மையுணராருணாருடங்கியைந்து தம்முட்
புணராமைகேளாம் புறன்" என்றோதுபவாக
லின் இஃதறியாத நும்பழித்துரையெல்லாம் எமக்கணி
கலமேயாமென்பது.

சிதம்பரப்பரதேசி,
திருமான் சிவஞானமெய்கண்டதேசிகருரை
முகத்துக்கேட்கு மாணாக்கன்.
செப்பறைவாசி, இலங்கைத்தேசி.

---

உ

## உண்மையாராய்ச்சி

---

கருத்துப்புலனுதற்குரிய பொருள், செவிப் புலனு
தற்குரிய ஒலிவடிவால் விளக்கமடையவில்லையா? செவி
ப்புலனுதற்குரிய அவ்வொலிவடிவம் கட்புலப்படும் வரி
வடிவால் நிலைபெற்று, அக்கருத்துப்பொருளை நிலைபெறு
த்தவில்லையா? கருத்துப்பொருள் ஒலிவடிவினும், வரிவ
டிவினும் விளக்கமடைந்து மனிதர்கருத்திலே நிலைபெறு
மாயின், மனிதர்களது தன்மையை நோக்கி, அவ்வொலிவ
டிவம், வரிவடிவம் என்னும் இருவடிவங்களும் அவர்தம்க
ருத்துப்பொருள்கட் கத்தியாவசியம் இருக்கவேண்டுவன
தாமே? அவ்விருவடிவங்கள்தவிர வேறுவடிவங்கள்வேண்
டியிருப்பினும், அவற்றையும் அமைத்துக்கொள்ளவேண்
டுவதுதானே? மனிதர்கருத்துச்சிலகாலம்வரையும்கருத்துவ
டிவமாயிருந்து, அதன்பின் சமிக்ஞைவடிவமாயும், ஒலிவடி
வமாயும், வரிவடிவமாயும் வெளிப்பட்டு விரியவில்லையா?
கருத்துப்பொருள் கருத்திலேயிருக்கும்பொழுது, அப்பொ
ருள் எக்கருத்திலேதோன்றிற்றோ, அக்கருத்திலேதானே
யிருக்கும்?; அக்கருத்திற்குத்தானே அது உபகாரப்படும்?
வேறுகருத்திற் குபகாரப்படவேண்டுமாயின் அது தன் வ
டிவத்தையேயன்றிச், சமிக்ஞை, ஒலி, வரி, என்னுமிவை

யும் இவை போன்றனவுமாகிய வேறு வடிவங்களையு மெ
டுக்கவேண்டுவதுதானே? சமிக்கையை நாடகமெனவும், ஒ
லியை இசையெனவும், வரியை இயலெனவும் உலகம்
வழங்கும்போலும்; அவற்றை அஃதிவ்வாறன்றி மற்றெ
வ்வாறு வழங்கினும் வழங்குக. இனி, கருத்துப்பொரு
ளைக் கருத்துப்பொருளாகவே கிரகித்தால் அதன் உண்
மையனைத்தும் உள்ளபடியே விளங்கும். ஆனால், ம
னிதனுக்கு அவ்வாறு கிரகிக்கும் ஆற்றலின்மையால், அ
வனுக்கு அப்பொருள் வேறுவடிவெடுத்துவர நேர்ந்தது;
அவ்வாறு நேரும்பொழுது, முதல்முதல் முகத்திலும்,
அதன்மேல் மற்ற உறுப்புகளிலு மாகப் பலவகைப்பட்
ட சமிக்கைவடிவெடுத்தது; அல்லது எடுக்கின்றது. எடு
க்கும்பொழுது அக்கருத்து தான் தோன்றிய உள்ளத்தோ
டுகூடிய அம்மனித உடம்பிருக்கும் வரையிலுமே அதன்
கண் அம்மனிதனது சங்கற்பப்படி இருந்து அது அழியு
ம்போது தானும் பிறர்க்கு விளங்காமல் உடன் போய்
விடுகின்றது. இதனால், அச்சமிக்கையும், அது தோன்
றுதற்கிடமாகிய உடம்பும்போன்ற வேறோர்வடிவம் கற்
பித்துவைத்து, அவ்வடிவிலே அமைக்கப்படும் சமிக்கை
யால், அவ்வடிவத்தை ஒத்த முன்னைய உடம்பின் உள்ள
த்தே நிகழ்ந்த கருத்துப்பொருளைப் பாதுகாக்க வேண்டிற்
று. "அகம்பொதிந்த தீமை மனமுணக்கு முன்னர் மு
கம்போல முன்னுணப்பதில்" என்று அதனை அக்கருத்
தைவிட நேரே முற்படத்தெரிவிக்குமென்று கொண்டா
ருமுளர். "அடுத்தது காட்டும் பளிங்குபோல் நெஞ்சம்
கடுத்தது காட்டும்முகம்" என அதன்தெளிவுகூறி யவ்வ
ளவிலமைந்தாரும் உளர்; எங்ஙனமாயினும், சமிக்கை
கருத்துப்பொருளை வெளிப்படத் தெள்ளிதிற்றெரிக்கு
மென்பது எல்லார்க்கு மொப்பமுடிந்த தொன்றாம். தலை
மைபற்றி முகங்கூறினும் "யானோக்குங்காலை நிலநோ
க்கும் நோக்காக்கால், தானோக்கி மெல்லநகும்' எனவும்,
"உணர்த்துவதும் கைக்காட்டு" எனவும் "இருந்ததனை
இருந்தபடி இருந்துகாட்டி" எனவும் வரும்வகையாற் க
ருத்துப்பொருள் பிறவுறுப்புகளினும் வெளிப்படத்தோன்
றுதல் உய்த்துணர்ந்து கொள்ளப்படும்.

இனி, ஒருவன் தன்கருத்தை எழுதிவிடுக்கும் வரிவ
டிவத்தாற் பெறப்படும் பொருட்டெளிவினும், அதனையே
அவன் ஒலிவடிவாற் குறிக்குமிடத்து அவன்வடிவை
நோக்காதே கேட்பின் மிக்கதோர் தெளிவெய்தும்; அத
னினும் மிக்கதோர் தெளிவெய்தும் அவனை நேரேகண்
டவிடத்து. "தெளிவுகுருவின் திருமேனிகாண்டல், தெ
ளிவு குருவின் திருவார்த்தைகேட்டல்" என வருதல்பற்
றியும் இவ்வுண்மை தெளிந்துகொள்ளப்படும்.

கருத்துப்பொருளைப் பிறர்க்கு அக்கருத்துணர்த்தா
மையாற், சமிக்கையும், சமிக்கை உணர்த்துதல் நிரம்பா
மையால் உரையும், உரையானும் முற்கூறிய சமிக்கையா
னும் அப்பொருள் நிலைபேறின்மையின்வரியும் வேண்ட
ப்பட்டனவன்றோவெனின், ஒக்கும்; கருத்திற்குச் ச
மிக்கைதூலமும், சமிக்கைக்குரை தூலமும், உரைக்குவரி
தூலமுமாமன்றோ? ஆகவே தூலத்தாற் சூக்குமம் விள
ங்குதல் ஒருதலையாம். ஆயினும், கருத்துப்பொருளின்றி,
இவ்வனைத்தும் எவ்வளவாக விரியினும் பயனின்றாதல்
போல, கருத்தின்உண்மைக்க ணின்ற சமிக்கை முன்னு
ரைப்படியன்றி, அச்சமிக்கை தன்னிடத்தே தொனிக்க
நிற்கும் உரையும், அவ்வுரை முன்னரோ கேட்கப்படின
ன்றி அவ்வுரையின் பிரதிநிதியாய்நின்ற தனைக்கேட்பிக்
கும் வரியும் உள்ளபடி பயன்படுதல் இலவாம். கருத்தி
ன்னதென் றறிவித்தற்கே சமிக்கைமுதலிய வனைத்தும்
எழுந்தனவாயினும், அவற்றுட் சமிக்கையொன்றே கருத்
தினுண்மைக்கணின்று, அதனை உடனே வெளிப்படுக்கும்
அதன்றூல வடிவாகலின், அஃதெவ்விதத்தாலாவது கா
க்கப்படின், மிகப்பயன்செய்யுமென்பதுகருதியேபோலும்,
சிலர் அல்லது பலர், அச்சமிக்கை தோன்றற்கிடனாய்
நின்ற உடம்போடதனையு மமைத்து, வடிவமைப்பாராயி
னர். இவ்வித்தை படிப்படியாய்த் தெய்வத்தால் அல்லது
தெய்வ சத்திபதிந்த மனிதரால் வளர்க்கப்படும்பொழுது
தான், அன்பர்க்கருள்செய்த அருள் வடிவங்களும், தத்தம
பொருட்குறிப் புணர்நின்ற சமிக்கையமைந்த விக்கிரகவ
டிவங்க ளெடுத்திருக்கலாமென் றெண்ணுகின்றோம்.

இனி, உயிர் உடலின்றி மற்றோருயிர்க்கு விளங்கா
மைகாண்கின்றோம். உயிர்க்குயிராகிய கடவுளும் அவ்வுயி
ரின்றி விளங்காமை காண்கின்றோம். கடவுட் கவ்வுயி
ரும் உடலும் வடிவமாகின்றன. கடவுட்கருத்து அவ்வு
யிரிடத்தும், உடலிடத்தும், அவற்றைச் சூழ்ந்த எனை
உலகிடத்தும் வெளியிடப்பட் டிருக்கின்றது. ஆதலால்
அதனை அவ்வுயிர் தன்னிடத்தும், தான்பெற்ற உடம்பி
னிடத்தும், தனக்கெனவமைத்த கரணத்திலும், புவன
த்திலும், போகத்திலும் வைத்தறிகின்றது. கடவுட்கரு
த்தும் உயிரின்பொருட்டு இத்தனைவடிவங்க ளெடுக்கின்
றது. எடுத்தும் நிரம்பாமையின், அக்கடவுட்கருத்து வி
ளங்குதற் குரித்தாய் அதனுண்மைக்கணின்ற சமிக்கை
யை வேண்டிற்று; அஃதோருடம்பை வேண்டிற்று;
அஃதேபோலும் திருவருட்குறி எனப்படும் கடவுள் விக்
கிரகம்என்பது!

கருத்துப்பெரிதாயினும், அதனை உணர்த்தவந்த சமி
க்கைமுதலியன சிறியவாயினும், அக்கருத்து அச்சமிக்கை
முதலியவற்றின்கணடங்கி விளங்காமற்போகவில்லை; அ
வ்வாறே சமிக்கைமுதலியன கருத்திற்குத் தூலமாயினு
ம் நுட்பமாய் விரியும்கருத்தை அங்ஙனம் விரியவொட்
டாது தடுக்கவுமில்லை. இதுபோலவே கடவுட்கருத்து
அல்லது கடவுட்குறிப்பு மிகப்பெரிதாயினும் அக்கருத்தா
ற்படைக்கப்பட்ட பொருள்களினிடத்தே அமைந்து போ
துமளவி லடங்காமற்போகவில்லை; அக்கருத்திற்கவை
தூலமாயினும் அதிநுட்பமாய் மிகவிரிந்தோங்குமக்கரு
த்தை நிகழவொட்டாது தடுக்கவுமில்லை. உயிர்
உடம்பாலும், கடவுள் உயிர்முதலியவற்றாலும் விள
க்கமுறுதலேயன்றி விளங்காதொழிதவில்லை. நுட்ப ப
தார்த்தங்கள் தாம் விளக்கமுறுதற்குத் தூலபதார்த்தங்க
ளை அவாவியே நிற்கின்றன; இங்ஙனமாகவும் வடிவில்
லாத உயிர்க்கு வடிவில்லாத கடவுள், வடிவமைத்து, அத
ன்வழியாய் அவ்வுயிர்தன்னை யறிந்துகொள்ள வைத்தாற்
போலத், தம்மையும் அவ்வழிபற்றியே அறியவைத்திருப்
பாரேயன்றித் தம்மைமாத்திரம் நேரே அவ்வுயிரறிந்துகொ
ள்ள வைத்திருப்பாரா? தைத்திருந்தாலுந்தா னென்ன?

அவ்வுயிர் தன்பழக்கமிகுதியால் தன்னைப்போலவே தன்னைப்படைத்த கடவுளும் உடம்புடையவராயிருக்கலாமென்று கருதினாற்குற்றமா? உடம்பில்லாமல் உயிரைத்தனியேவைத் துணரக்கூடியவர் யாவர்? உயிரையும் உடம்பல்ல, கரணங்களல்ல, புவனங்களல்ல, போகங்களல்ல என்று அன்மைச்சொற்களால் சொல்லுதலேயன்றி இன்னதுதானுயிரென்று அதனை நேரேயறிந்து சொல்வார் யாவர்? அதுபோலவே கடவுளையும் "பூதங்களல்ல பொறியல்ல வேறு புலனல்ல வுள்ளமதியின், பேதங்களல்ல விவையன்றி நின்றபிறிதல்ல" வென்று அன்மைச்சொற்களாற் சொல்லிக்கொண்டு கிடந்து தடுமாறுவதேயன்றி இதுதான் கடவுளென்று கண்ணுக்காவது கருத்திற்காவது காட்டினவர்யாவர்? குணத்தைக் குணியைவிட்டறியவியலாததும், உயிரை உடம்பையின்றி யறியவியலாததுமாகிய உயிர் தன்முதல்வனையும் ஏதாவதொருவகையால் ஓர் பொருளில்வைத்து அறிந்து வழிபடுமேயன்றி வேறெவ்விதத்தால் வழிபடும்? கடவுளை உயர்திணையாகவும் அஃறிணையாகவும் கூறிவழிபடுகின்றார்கள். அது குற்றமாகுமா? தனக்குத்தெரியாத தொன்றைத் தெரிந்ததொன்றில்வைத் தறியலாமேயன்றித் தெரியாதவேறொன்று தேடுவதும் அதில் வைத்தறிவதும் ஒருவற் செவ்வாறு கூடும்? இதுநிற்க.

(இன்னும்வரும்) (உ- வி.)

---

உ

## தனிப்பாடல்கள்

ஆரா ரென்ன சொன்னா லென்ன
அவரோ சொன்ன தாமோ? — இத்தை
ஓரா தவர் சொன்னா ரிவர்
சொன்னா ரென்னப் போமோ? (௧)

நல்லா ரொன்றும் சொல்லா ரவர்
சொன்னால் நல்ல சொல்வார்—சற்றும்
பொல்லா தன சொல்வார் களோ?
சொன்னா லவர் சொல்லோ? (௨)

பொல்லார் நல்ல சொல்லார் சொல்லிற்
பொல்லா தவே சொல்வார்—செல்லின்
வல்லார் சற்றும் வாடார் மனம்
நல்லார் ஒன்றும் நாடார். (௩)

நெல்லே விதைத் தாலந்த நெல்
நெல்லே தரும் அல்லாற்—பின்னைப்
புல்லோ தரும்? அதுபோல நாம்
சொல்லாத சொல் வருமோ? (௪)

ஐயையோ நாம் ஆரெங்குவந்
த்தாமென் றறி யாரோல்—அவர்க்
குய்யும் வழி ஈதென் றிடில்
ஐயோ அறி வாரோ? (௫)

S.

---

## ஒப்பு நோக்குதல்.

சைவம்,—"பதி, பசு, பாசம்" என்கின்றது.
கிறிஸ்தவம்,—"தேவன், மனிதன், பாவம்"என்கின்றது.
சை;—சிவன், குரு, திருவருள் என்கின்றது;
கிறி,—பிதா, குமாரன், பரிசுத்தாவி என்கின்றது.
சை,—சிவன், குரு, திருவருள் எனுமிவை ஒன்றென்கின்றது.
கிறி,—பிதா, குமாரன், பரிசுத்தாவி என மூன்றும் ஒன்றென்கின்றது.
சை,—மலம், ஆன்மாவிற் கநாதியே உண்டென்கின்றது;
கிறி,— பாபம் உயிர்கட்கு ஆதிதொட்டே உண்டென்கின்றது.
சை,—ஸ்ரீ பார்வதி தேவியார், உயிர்கள் செய்த பாவத்தீர்விற்குத் தாமே ஸ்ரீ காஞ்சியிற் றவஞ்செய்தமை கூறுகின்றது;
கிறி,—கிறிஸ்து, மனிதர்களின் ஜென்மபாவத்தீர்விற்குத் தாமே தம்மைப் பலிகொடுத்தமை கூறுகின்றது.
சை,—சிவத்துரோகமென ஒன்று கூறி அதற்குப் பிராயச்சித்தங் கூற அஞ்சுகின்றது; "தீராது தீராது சிவத் துரோகம்"என்று கூறி மிகவும் அச்சுறுத்துகின்றது;
கிறி,—தேவனுக்குச் செய்த பாவம் என ஒன்றுகூறி அதற்கு நித்திய நரகம் விதித் தச்சுறுத்துகின்றது.
சை,—தீக்ஷையென ஒன்று கூறுகின்றது;
கிறி,—"ஞானஸ்நானம்"என்றொன்று கூறுகின்றது.
சை,—சிவலோகம், கைலாயம் என்கின்றது;
கிறி,—பரமண்டலம் என்கின்றது.
சை,—பலவகைப்படுகின்றது;
கிறிஸ்தவமும்,—அது. அப்படியானால் மனிதருள்ளம் அதி முக்கிய விஷயங்களில் அநேகமாய் ஒத்துத்தான் நடக்கும்போலும்! இன்னும் கூர்ந்துநோக்கிச், சாவதானமாய்ப் பரிசோதனைபண்ணினால், இவ்விரு சமயங்கட்கும் உள்ள ஒற்றுமை நயங்கள் எத்தனையுளவென்றறிந்துகொள்ளுதற் கேதுவாகும். அவ்வாறு செய்யும்படி விவேகிகளைத் தூண்டுகின்றேன். ஒப்புநோக்குவோன்.

---

## ஜாதி சிறந்ததோ, சமயஞ் சிறந்ததோ?

ஐயா,

அகம்பிரவாதிகட்குத் தம்மைத்தவிர வேறு தெய்வமுண்டா? அவர்களையும சைவர்களிற் பெரும்பாலார் தம் மவரென மயங்குகின்றார்களே; அதென்ன? அச்சைவர்கள் அவர்களைக் கிறிஸ்தவரினும் மேலாக மதிக்கின்றார்களே; அதென்ன? ஜாதி பற்றியா? ஜாதி பற்றியென்றால், பிராமணக்கிறிஸ்தவர்கள்முதலிய உயர்ந்த ஜாதி கிறிஸ்தவர்களை என் மதிக்கவில்லை? தம் கொள்கைப்படி விபூதி பூசிச் சிவனை வணங்கி அதிசுத்தர்களாய், இந்துவாயிருக்கும் பள்ளர், பறையர் உயர்ந்தவர்களா? விபூதி பூசாமலும் சிவனை வணங்காமலும் இருக்கும் அன்னிய மதத்தினர் உயர்ந்தவர்களா? அந்நியர் அவர்களைத்தொட்டுக்கொண்டிருக்க அவ்வன்னியரை உயர்ந்தஜாதிச் சைவர்களாகிய தாமும் தொட்டுக்கொண்டிருக்கத் தாமாத்திரம் அப்பள்ளர் பறையர்களைத் தாமாகத் தொட அருவருத்தொதுங்கி ஓடுவதேன்? "ஆவுரித்துத் தின்றுழலும் புலையரேனும், கங்கைவார் சடைக்கரந்தார்க் கன்பராகி லவர் கண்டீர் நாம்வணங்கும் கடவுளாரே" என்றுருகியுருகிப் பூசையிற் பாடுவதின் நோக்கமென்ன? அன்றியும் அதே பள்ளர்கள் அல்லது பறையர்கள் கிறிஸ்தவர்களானபின் அவர்களைச் சாரென்றும்(Sir),மாடமென்றும்(Madam), சொல்லாலுபசரிப்பதும், கைகுலுக்குவதும், வீட்டுக்குள் வரவழைப்பதும் வெகு வெட்கக்கேடல்லவா?.

உண்மை உசாவுவோன்.

## விக்கிரகாராதன கண்டன வெதிரோகம்.

---

முன் தொடர்ச்சி.

கடவுளுக்கு வியாதியென்று சொல்லி திருக்குற்றால நாதருக்கு மண்டையிடி தீர வற்றூக்குடிநீர் வைத்து நைவேத்தியம் செய்வதனால் நம் வியாதியைத் தீர்க்க நாம் அவரைப் பிரார்த்தித்தல் கூடுமா? என்பதும் வைத்திய நாத சுவாமியும் இக்குற்றால நாதரும் ஒரே தெய்வத்தைக் குறிப்பதானால் அவர் இவர்பால் கிருபை வையாததற்குக் காரணமேதோ? என்பதும் துண்டுப்பத்திரிகையின் 8-வது வினா. இந்த வினாவின் இரண்டாவது பாகத்தில் கொஞ்சம் பொருத்தக் குறைவு இருப்பதாகத் தோன்றுகிறது. வைத்தியநாத சுவாமியும் இக் குற்றால நாதரும் ஒரே தெய்வத்தைக் குறிப்பதானால் ஒருவருக்கு மண்டையிடி யிருப்பதுபோலக் குடிநீர் வைத்து நைவேத்தியம் செய்வதற்கும் மற்றொருவர் வைத்தியநாத சுவாமியாயிருப்பதுபோலவும் சொல்வதற்குக் காரணம் யாதோ என்று வினாவவேணுமென்ற நோக்கத்துடன் கேட்டிருக்கலாமென நினைக்கிறேன்.

திருக்குற்றால நாதர், வைத்தியநாதர் என்னும் காரணப் பெயர்கள் இரண்டாயிருப்பினும் முதல் ஒன்றேயென்றும், புஷ்பத்திலு மிருதுவாக அபிமானிக்கப்பட்ட தம் புதல்வரது கைகள் தம்மேற் பட்டதனாற் றமக்கு நோவுற்றதுபோற் பாசாங்கு செய்து அப்புதல்வரோடு விளையாடிக் களிக்கும் பிதாவையும் புதல்வர் அப்பாசாங்கை நம்பிச் செய்யுஞ் சிகிச்சையையு மொப்பத் திருக்குற்றால நாதருக்கு முற்காலத்து ஓர் அன்புடையார்காரணமாக மண்டையிடி தீரவென வேற்படுத்திய வற்றூக்குடிநீர் நைவேத்தியமவர் அன்பிற்கு அறிகுறியாக உபசாரமாய் நடந்து வருவதேயன்றி குற்றால நாதருக்கு மண்டையிடி யில்லையென்பது எப்போது மனுபவமாய் காணக்கூடியதேயாமெனவு மிவ்வெதிரோகத்தில் மேற்படி வினாவுக்கு விடையளிக்கப்பட்டுளது.

புதல்வர் கை, தம்மேற்பட்டால் தமக்கு நோவில்லாதிருந்தும் நோவுற்றதுபோற் பாசாங்கு செய்து களிக்கும் பெற்றோருஞ் சிலருளர் என்பது வாஸ்தவமே. ஆனாலப்படிப் பாசாங்கு செய்வது சரியா? பாசாங்கென்பது இல்லாததை உள்ளதுபோல் நம்பும்படி செய்கிற நடிப்புத் தானே?.

எவ்வித முகாந்தரத்தாலாயினும் பாசாங்கு செய்யலாமா? தற்சமயமுண்டாகுஞ் சந்தோஷத்தை முன்னிட்டுத் தம் புதல்வரிடத்திற் பாசாங்கு செய்தல் முறையா? அவ்விதம் நடிப்பது அப்பெற்றோர்க்குக் கெடுதலாய் முடியாதா? உள்ளதை உள்ளதாகச் சொல்வதும் யாது காரணம் பற்றியும் பாசாங்கு செய்யாதிருப்பதுமே தகுதியே தவிர மாறி நடப்பது தகுதி அன்றென நினைக்கிறேன். இவ்விதமாறி நடப்பது ஜீவாத்மாவின் அபிவிர்த்திக்குக் கெடுதலாய் முடியுமென்று நினைக்கிறேன். இது நிற்க. மேற்கூறிய பெற்றோரது பாசாங்கினாலும் புதல்வரது சிகிச்சையினாலும் பெற்றோர்கள் நோவடையக்கூடுமென்றும் அந்நோவைப் புதல்வர்கள் சுகப்படுத்த முயலவேணுமென்றும் சுகப்படுத்தல் கூடுமென்றும் புதல்வர்களின் மனதிற் படுகின்றது. பெற்றோர்கள் நோவடைதல் சகசம் அதைப் புதல்வர் தீர்க்கமுயல்வது அவரது கடமை. இம்முயற்சியில் புதல்வர்களைப் பயிற்சிசெய்ய வேண்டியது அவசியம். பாசாங்குசெய்து அவ்வித பயிற்சி செய்தல் தகுதியன்று.

சமயம் வாய்க்கும்போதெல்லாம் பெற்றோர்கள் நோவடையக் கூடியவர்களென்பதையும் அதைப் புதல்வர்கள் மனதில் அழுந்திப் பதியும்படியான விதமாகப் புதல்வர்களுக்குப் பயிற்சிப்பது முறையே, கடவுளை வழிபடும் விதம் அவர் சர்வ வியாபகர், பரிபூரணர், தன்னில் யாதொரு குறைவுமின்றித் தனக்கு யாதொன்றும் வேண்டாதவராய் ஜீவாத்மாக்களின் பக்குவத்துக்குத் தக்கபடி அவைகளுக்கு வேண்டும்நன்மையை இடையறாது செய்துகொண்டிருக்கும் அளவற்ற கருணையுடையார் என்பது ஜீவாத்மாக்களின் மனதில் பட்டு வேரூன்றி வளரும்படிக்கு செய்ய ஒரு ஏதுவாயிருக்கவேணுமென்று நினைக்கிறேன். கடவுள் வியாதியுடையவர் போலவும் மற்றுங் குறைபாடுள்ளவர் போலவும் மனதில் படும்படியான விதமாய்ச் செய்கிற வழிபாடு சரியான வழிபாடென்று சொல்வது எவ்வளவு தூரம் சரியோ அறியேன். இது நிற்கத் திருக்குற்றால நாதருக்கு மண்டையிடி யில்லையென்பது எப்போதும் அனுபவமாய் பார்க்கத்தக்கதேயாம் என்று சொல்லியிருப்பதின் கருத்தென்னை? குற்றாலநாதர் விக்கிரஹத்துக்கு மண்டையிடி யில்லையென்பது அனுபவமாய்ப்பார்க்கத்தக்கதுதான் அதுபோலவே அவ்விக்கிரஹத்துக்கு அறிவாற்றல், ஞானமுதலிய ஆத்மகுணங்களில்லையென்பதும் அனுபவமாய்ப் பார்க்கத்தக்கதல்லவோ? மேற்படி விக்கிரஹத்தில் ஆவேசித்திருப்பதாய்ச் சொல்லுகிற கடவுளுக்கு நோவில்லையென்பது அனுபவமாய்ப் பார்த்தலெப்படி? புதல்வர் கைபட்டபோது நோவுண்டானதாகப் பாசாங்குசெய்து அப்பாசாங்கை நம்பி புதல்வர் சிகிச்சைசெய்யும்படி செய்கிற பெற்றோரையொப்ப முற்காலத்து தனக்கு நோவிருப்பதுபோல ஓர் அன்புடையாரை நம்பும்படிசெய்து அவர் அந்நோவுதீரவென்று குடிநீர் வைத்து நைவேத்தியம் செய்தபோது குற்றாலநாதருக்கு மண்டையிடி யிருந்ததாக அவ்வன்புடையார் நம்பவில்லையோ? தனக்குமண்டையிடி யில்லாதிருக்க மண்டையிடியிருந்ததுபோல கடவுள் அவ்வன்புடையாரை நம்பும்படி செய்யவில்லையோ? அவ்வன்புடையாரே கடவுளுக்கு மண்டையிடி யிருந்ததாக நம்பி சிகிச்சைசெய்ததாயிருந்தால் குற்றாலநாதருக்கு மண்டையிடியில்லையென்று நாம் அனுபவமாய்ப் பார்ப்பதெப்படி அய்யோ, கடவுளுக்கு நோயிருப்பது போலவும் எண்ணிவழிபடும் வழிபாடெல்லாம் விக்கிரஹாராதனையினால் வந்த கேடன்றோ?

(இன்னும் வரும்)

24--2--05 —— திருமங்கைமாநகர்வாசி.

பலசௌகரியங்களை உத்தேசித்து இது முதல் நமது திருநாவுக்கரசு ஒவ்வொரு ஆங்கிலமாசத்திலும் 10-உ வெளிவரும்.

ப—ர்.

---

"திருநாவுக்கரசுவளர் திருத்தொண்டி னெறிவாழ்க"

திருச்சிற்றம்பலம்.

---

Printed and published by M. Draviam Pillai
Aryaprakasini Press, Tinnevelly Bridge.